Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

பக்கங்கள் 12

சுடர் : 38
கதிர் : 58

திங்கட்கிழமை 23 ஜனவரி 2023

தை 09 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2053

# யாழ்ப்பாணப் பல்கலைப் பேரவை; உறுப்பினர்களாக 9 பேர் நியமனம்!

யாழ்ப்பாணம், ஜன. 23
யாழ். பல்கலைக்கழகப் பேரவைக்கான வெளிவாரி உறுப்பினர்களாக 9 பேர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டுள்ளனர்.
பேரவையின் வெளிவாரி உறுப்பினர்களின் பதவிக்காலம் கடந்த 15ஆம் திகதியுடன் முடிவடைந்ததைத் தொடர்ந்து, கடந்த 16ஆம் திகதி முதல் அடுத்துவரும் மூன்றாண்டு காலத்துக்கு 9 வெளிவாரி உறுப்பினர்கள் »11

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு இன்று தோற்றும் அனைத்து மாணவர்களும் வாழ்வில் சிகரத்தைத்தொட உங்கள் 'உதயன்' அன்புரிமையுடன் வாழ்த்துகின்றான்.



# ஐ.எம்.எப். கடனுக்கான இறுதித் தடையும் நீங்கியது

## இலங்கைக்கு 2 ஆண்டுகள் அவகாசம் வழங்கியது சீனா

**கொழும்பு, ஜனவரி 23**

**இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி கிடைப்பதற்கு தடங்கலாக இருந்து வந்த கடன் வழங்குநர்களின் கடன்மறுசீரமைப்புக்கான இணக்கம் முழுமையாக எட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தியா ஏற்கனவே கடன் மறுசீரமைப்புக்கு இணங்கியிருந்த நிலையில் சீனாவும் இரண்டு ஆண்டுகள் கால அவகாசத்துடன் கடன் மறுசீரமைப்புக்கு இணக்கம் வெளியிட்டுள்ளது.** »11

# வாக்குச்சீட்டுக்கள் தயாரிப்பு ஆரம்பம்

கொழும்பு, ஜன. 23
உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்கான வாக்குச்சீட்டுகள் தயாரிக்கும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
340 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படவுள்ளதுடன் அவற்றுக்குத் தனித்தனியாக வாக்குச்சீட்டுக்கள் அச்சிடப்படவுள்ளன. வாக்குச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு அவை அச்சிடும் பணிகளுக்காக விரைவில் அரச அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன. »11

# மேயர் தெரிவில் தலையிடவில்லை

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜன. 23
யாழ். மாநகரசபையில் இடம்பெற்ற புதிய முதல்வர் தெரிவு எனது அதிகாரத்துக்கு உட்பட்டது அல்ல. அதில் நான் தலையிடவில்லை - இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.
யாழ். மாநகர மேயராக இ.ஆர்னோல்ட் நியமிக்கப்பட்டமை சட்ட விரோதமானது »11

இலங்கையின்

# கால்பந்து சம்மேளனத்தை இடைநிறுத்தியது பீஃபா

கொழும்பு, ஜன. 23
கடந்த 21ஆம் திகதி முதல் நடைமுறையாகும் வகையில், மறு அறிவிப்பு வரும் வரை இலங்கை கால்பந்து சம்மேளனத்தை சர்வதேச கால்பந்து சம்மேளனம் (பீஃபா) இடைநிறுத்தியுள்ளது.
ஜனவரி 14ஆம் திகதி நடைபெற்ற »11

# பரீட்சை நடந்தாலும் மின்வெட்டுத் தொடரும்

கொழும்பு, ஜன. 23
2022ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சைகள் இன்று ஆரம்பமாகவுள்ள நிலையிலும் தொடர்ந்து இரண்டு மணித்தியாலங்கள் 20 நிமிட மின்வெட்டு நடைமுறையாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. »11

# போதை மாத்திரை; சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 23
தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்லாகம் ரயில் நிலையத்துக்கு அண்மையாக 250 உயிர்கொல்லி போதை வில்லைகளுடன் ஏழாலையைச் சேர்ந்த 24 வயதான சந்தேகநபர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். »11

# மாணவர் சுற்றுலாவுக்கு விரைவில் கட்டுப்பாடு

கொழும்பு, ஜன. 23
பாடசாலை மாணவர்கள் கல்விப் பயணங்களுக்குச் செல்லக்கூடிய தூரத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் கல்விஅமைச்சு கவனம் செலுத்தியுள்ளது. இதன்படி, ஒரு நாளைக்கு »11

# மின்கட்டணத்தை அதிகரிக்காவிடின் நாட்டில் மீண்டும் வரிசையுகம்தான்!!

## அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 23
மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்காவிட்டால் மீண்டும் வரிசை யுகத்துக்குச் செல்லும் அபாயம் உள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.
'அண்மையில் கட்டணத் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இலங்கை மின்சாரசபைக்கு மாதாந்தம் சுமார் 35 பில்லியன் ரூபா மாத்திரமே கிடைக்கின்றது. ஜனவரி மாதத்தில் மட்டும் மின்சார »11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்சக்களுக்குத் தடைவிதிக்க ஜி-7 நாடுகளும் முன்வரவேண்டும்!

## கனேடிய வெளிவிவகார அமைச்சர் வலியுறுத்து



கொழும்பு, ஜன. 23
முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ச, கோத்தாபய ராஜபக்ச மற்றும் இரண்டு இராணுவ அதிகாரிகள் மீது தாம் விதித்ததைப் போன்று ஜி–7 நாடுகளும் பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும். கனடா அதை வலியுறுத்தும் வகையில் செயற்படும் – என்று தெரிவித்துள்ளார் கனேடிய வெளிவிவகார அமைச்சர் மெலனி.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:
2023 ஜனவரி மாதம் 10 ஆம் திகதியன்று இந்த நான்கு பேர் மீதும் கனடா பொருளாதாரத் தடைகளை விதித்தது. 1983 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையிலான மனித உரிமை மீறல்கள் தொடர்பிலேயே இந்தத் தடை விதிக்கப்பட்டது. இந்தத் தடையை ஜி-7 நாடுகளும் பின்பற்றவேண்டும். அதை வலியுறுத்தும் வகையில் கனடா செயற்படும். கனடா எப்போதும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காகச் செயற்படுகிறது என்ற அடிப்படையிலேயே, ராஜபக்ச சகோதரர்கள் மற்றும் மற்றவர்கள் மீது கடுமையான தடைகளை விதிக்க முடிவு செய்துள்ளது. இதனால், இதுபோன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜி-7 நாடுகளான பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், பிரிட்டன், மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளை வலியுறுத்துவதே எமது நோக்கம். இலங்கையில் உள்ள தமிழ் சமூகத்துக்கு இதுதான் பிரச்சினை என்று தெரியும். எனவே சமாதானத்தை அடைய, உண்மையைச் சுட்டிக்காட்ட வேண்டும் என்பதை அவர்கள் அறிந்துள்ளார்கள் - என்றார். (ம)

## அமரர் வி.தர்மலிங்கம் சிலை திறப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன. 23
உடுவில் மற்றும் மானிப்பாய் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரான அமரர் விஸ்வநாதர் தர்மலிங்கத்தின் திருவுருவச் சிலை திறப்பு நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு வலிகாமம் தெற்கு பிரதேசசபையில் இடம்பெறவுள்ளது.
வலிகாமம் தெற்கு பிரதேசசபை தவிசாளர் கருணாகரன் தர்ஷன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராசா பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார். (ச)

## நுரைச்சோலை மின்பிறப்பாக்கி மீண்டும் மின்கட்டமைப்புக்குள்

கொழும்பு, ஜன. 23
பராமரிப்புக்காக இடைநிறுத்தப்பட்டிருந்த நுரைச்சோலை அனல் மின்நிலையத்தின் முதலாவது மின் உற்பத்தி இயந்திரம் தற்போது முழுக் கொள்ளளவுடன் தேசிய மின் கட்டமைப்பில் மீண்டும் இணைக்கப்பட்டுள்ளது. (ம)

## சவூதி செல்கின்றார் அமைச்சர் அலி சப்ரி



கொழும்பு, ஜன. 23
சவூதி அரேபியாவின் வெளிவிவகார அமைச்சர் இளவரசர் பைசல் பின் பர்ஹான் அல் சௌதின் அழைப்பின் பேரில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இன்று சவூதி அரேபியாவுக்கு உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.
இன்று முதல் எதிர்வரும் 27ஆம் திகதி வரை 5 நாள்கள் பயணமாக அலி சப்ரி சவூதிக்குச் செல்கின்றார். இந்தப் பயணத்தின்போது இஸ்லாமிய மேம்பாட்டு அபிவிருத்தி வங்கியினர், இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பினர், வளைகுடா ஒத்துழைப்பு பேரவையினர், மக்கா மற்றும் மதீனா நிர்வாகத்தினர் ஆகியோருடனும் அலி சப்ரி பேச்சுக்களை நடத்தவுள்ளார். (ம-இ)

## முட்டை விற்பனை இனிமேல் இறுக்கமாகக் கண்காணிப்பு

### நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 23
அதிகபட்ச சில்லறை விலைக்கு மேல் முட்டைகளை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் மற்றும் உற்பத்தியாளர்களைக் கண்டறிய நாடளாவிய ரீதியில் சோதனை நடவடிக்கைகள் நேற்றுமுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி சாந்த நிரியல்ல தெரிவித்தார்.
வெள்ளை முட்டையின் சில்லறை விலையாக 44 ரூபாவும், சிவப்பு முட்டையின் அதிகபட்ச சில்லறை விலையாக 46 ரூபாவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனி னும், இந்த நிர்ணய விலைக்கு முட்டைகளை விற்பனை செய்ய இயலாது என்று முட்டை விற்பனை யாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்தப் பின்னணியிலேயே நுகர்வோர் அதிகாரசபையினர் இவ்வாறு தெரிவித்துள்ளனர். (ம-இ)

### கட்டுப்பாட்டு விலை எதிரொலி

## விற்பனையிலிருந்து விலகுவதாக முட்டை வர்த்தகர்கள் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 23
முட்டைக்கான கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்பட்டுள்ளமையால் தங்களது தரப்பு முட்டை வர்த்தகத்தில் இருந்து விலகுவதற்குத் தீர்மானித்துள்ளதாக இலங்கை முட்டை வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் என்டன் அப்புஹாமி தெரிவித்துள்ளார்.
தங்களது செயற்பாடு காரணமாக எதிர்காலத்தில் முட்டைக்கான தட்டுப்பாடு பெரியளவில் ஏற்படுவதற்குச் சாத்தியமுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ம-இ)

## நிலக்கரி இறக்குமதிக்கு ரூ.55 பில்லியன் தேவை

கொழும்பு, ஜன. 23
மின் உற்பத்திக்கான நிலக்கரியை கொள்வனவு செய்வதற்கு தேவையான 55 பில்லியன் ரூபாவைப் பெற்றுக் கொள்வதற்கு நிதி அமைச்சு தீவிர முயற்சிகளை முன்னெடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
ஜனாதிபதி செயலாளர் சமன் ரத்நாயக்க மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன ஆகியோரின் தலையீட்டுடன் இதுவரையில் 20 பில்லியன் ரூபா பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதோடு, எஞ்சிய 35 பில்லியனைப் பெறுவதற்கான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
இம்மாத இறுதிக்குள் இந்த பணத்தொகையை திரட்டி நிலக்கரியை கொள்வனவு செய்யாவிட்டால் மின் விநியோக நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும் என்று மின் பொறியியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-இ)

## உயர்தரப்பரீட்சை இன்று; முன்னேற்பாடு முழுமை!

கொழும்பு, ஜன. 23
கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை இன்று இடம்பெறவுள்ள நிலையில், இதற்காக அனைத்து அடிப்படை நடவடிக்கைகளும் முழுமையடைந்துள்ளன என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இது தொடர்பில், பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர நேற்று விடுத்துள்ள அறிவிப்பில்,
2022 - 2023ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை நாளை (இன்று) முதல் 2 ஆயிரத்து 200 தேர்வு மையங்களில் நடைபெறவுள்ளது. இந்தவருடம் 3 லட்சத்து 31 ஆயிரத்து 709 பாடசாலை மற்றும் தனியார் விண்ணப்பதாரர்கள் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.
பெப்ரவரி 17ஆம் திகதிவரை பரீட்சை நடைபெறவுள்ளது. மேலும், பரீட்சை நிலையங்களின் பாதுகாப்புக்காக விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்றுள்ளது. (ம)

### அரச மருத்துவமனைகளில்

## நோயாளர்களின் வருகை 25 வீதத்தால் அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 23
அரச மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை 25 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.
தனியார்துறையின் மருந்து மற்றும் சிகிச்சைகளின் விலையேற்றம் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. கடந்த காலங்களில் தனியாரை நாடிய மக்கள் தற்போது அரச மருத்துவமனைகளை நாடியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.
குறிப்பாக ஆய்வக சோதனைகளுக்கு வருபவர்களின் எண்ணிக்கையில் கணிசமான அதிகரிப்பு இருப்பதாகவும் அவர் கூறினார். இதனால், அரச மருத்துவமனைகளின் மருந்துகளின் இருப்பு நாளுக்கு நாள் குறைந்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மின்வெட்டும் மாணவர்களும்

மாரி காலத்தில் மழை பெய்ய மறந்தாலும் கூட, பரீட்சைக் காலங்களில் ஏதோவொரு சாட்டினைச் சொல்லி மின்சார விநியோகத்தில் தடையை உண்டாக்க இலங்கை அரசாங்கங்கள் ஒருபோதும் மறந்ததில்லை. மாணவர்களின் கடைசிநேரக் கற்றலைக் குழப்பி, அவர்களின் வாழ்வோடு விளையாடுவது மின்சாரசபையின் பரம்பரைப் பொழுதுபோக்கு. தொட்டுத் தொடரும் அந்தக் கெட்ட பாரம்பரியம் இம்முறை கைவிடப்படுவதாக– பரீட்சைக் காலத்தில் இரவில் மின்வெட்டு அமுல்படுத்தப் படாது என்று – அரசாங்கம் அறிவித்திருந்தது. ஆனால் 'மின்வெட்டை நடைமுறைப்படுத்தாவிட்டால் விரைவில் நாடு முழுதுமாக இருளில் மூழ்கிவிடும், வரிசையுகம் வந்துவிடும்' என்றெல்லாம் – பூச்சாண்டி காட்டி, தடாலடியாக முந்தைய அறிவிப்பை மீளப்பெற்றுக்கொண்டு, பரீட்சைக் காலத்திலும் வழக்கம்போல மின் தடை தொடரப்போகின்றது என்று அரசாங்கம் நேற்று அறிவித்திருக்கின்றது.


உண்மையில் அரசாங்கம் சொல்வது போல, பரீட்சைக் காலத்தில் மின் தடையை அமுல்படுத்தாவிட்டால் , மின்னுற்பத்தி நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரி விரைவில் தீர்ந்து போய், அவற்றைக் கொள்வனவு செய்ய டொலரில்லாமல் திண்டாடும் நிலை வரக்கூடும். ஆனால் அதற்காக இலங்கையின் தலையெழுத்தைத் தீர்மானிக்கப்போகும் எதிர்காலத் தலைமுறையான மாணவர்களின் பரீட்சையோடு விளையாடுவது சரியா? பரீட்சைக் காலம் நெருங்கும்போதே போதிய நிலக்கரியை முற்கூட்டியே கொள்வனவு செய்துவைத்திருந்தால் , இப்படி மின் தடையைத் தொடரவேண்டிய நிலை வந்திராதே. பரீட்சைகள் ஒன்றும் மின்னாமல் முழங்காமல் பெய்யும் திடீர் மழைத்தூறல்களோ அப்படிப் பெய்த மழைக்கு மறுநாள் முளைக்கும் காளான்களோ அல்ல. மிக நீண்டகாலத்துக்கு முன்னரே திட்டமிட்டு, நாள் குறித்தே தேசியமட்டத்திலான இந்தப் பரீட்சைகள் நடைபெறுகின்றன. எனவே சரியான திட்டமிடலை மேற்கொண்டால், ஒவ்வொரு பரீட்சைக் காலத்திலும் மின்வெட்டைத் தடுக்க முடியும். ஆனால் இங்கு நடப்பவை அதற்குத் தலைகீழாகவே இருக்கின்றன.

இம்முறை மின் வெட்டைத் தவிர்க்கவே முடியாது என்றால் , அதை முன்னரே தெரிவித்திருக்க வேண்டும். மாறாக 'பரீட்சைக் காலத்தில் மின்வெட்டு இல்லை' என்று மாணவர்களிடம் நம்பிக்கை ஒளியைப் பாய்ச்சிவிட்டு, பின்னர் அடுத்தநாளே' மின்வெட்டுத்தொடரும்' என்று இருளைப்பரப்பும்பித்தலாட்டம் எதற்கு என்பதுதான் புரியவில்லை. இது மாணவர்களின் உளவுரணை சிதைக்கும் ஒரு செயற்பாடாகவே தோன்றுகின்றது. பரீட்சைக் காலத்தில் மாணவர்கள் வழக்கத்தை விடவும், அதிகமான பதகளிப்பில் இருப்பார்கள். அதுவும் உயர்தரப் பரீட்சை வாழ்க்கைப் பாதையை – பல்கலைக்கழக அனுமதியை – தீர்மானிக்கின்ற வல்லமை கொண்டதாக இருப்பதால், மாணவர்களின் பதற்றமும், பயமும் இன்னும் அதிகமாகவே இருக்கும். அப்படிப்பட்ட நிலையில் இப்படி 'மின்வெட்டு இருக்கா? இல்லையா?' என்கிற விளையாட்டு அவர்களை உளவியல்ரீதியாகப் பலவீனப்படுத்தி, பரீட்சைக்கான தயார்ப்படுத்தலில் பாதகமான நிலையை உண்டாக்கிவிடும். இப்போது எல்லாவற்றையும் குழப்பியடித்துவிட்டு, பின்னர் பரீட்சை முடிவுகள் வந்தவுடன் 'மாணவர்களின் கல்வித்தரம் வீழ்ச்சியடைகிறது' என்று குத்திமுறிவதில் பயனேதுமில்லை. இப்போதைய பொருளாதார நிலையில் மின்வெட்டு மூலம் நெருக்கடி நிலையைத் தவிர்க்கக்கூடியதாக இருக்குமென்பது உண்மைதான். ஆனால் கல்விக்கு இந்த மின்வெட்டால் இடையூறு ஏற்படுமானால் அது எதிர்காலத்தில் இப்போது இருப்பதைவிடவும் பாரதூரமானபின்விளைவுகளை உண்டாக்கி விடும். ஏனெனில் கல்விதான் என்றைக்கும் அழியாத மூலதனம். அதனூடாக எந்தவொரு பொருளாதாரச் சரிவையும் நிமிர்த்தமுடியும். இப்போதைய குறுகிய இலாபத்தை கணக்கெடுத்து, எதிர்காலப் பெருநட்டத்துக்கு வழிவகுப்பது சரியா?

### நாளொரு நல்வார்த்தை

"என் முயற்சிகள் என்னை பலமுறை கைவிட்டதுண்டு. ஆனால், நான் ஒரு முறை கூட முயற்சியைக் கைவிட வில்லை"

– தோமஸ் அல்வா எடிசன்



# தேர்தலைத் தாமதப்படுத்த ஜனாதிபதி ரணில் சதி

## அனுரகுமார குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 23

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தாமதப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மக்கள் சந்திப்பொன்றில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மின்வெட்டு, மருந்து தட்டுப்பாடு போன்ற பல்வேறு காரணங்களை கூறி அரசாங்கம் தேர்தலை தாமதப்படுத்துகிறது. அவர்கள் திறைசேரி செல்வத்தை அதிகரிக்க விரும்பவில்லை. இது நடந்தால் தேர்தலை நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்படும். எனவே, அவர்கள் நீண்ட காலம் ஆட்சியில் இருக்க வேண்டும் என்பதற்காக திறைசேரி இருப்பைக் குறைத்துக்கொண்டே இருக்கிறார்கள். தேர்தலை நடத்துவதற்கு நாடாளுமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. திறைசேரிச் செயலாளர் தேர்தலுக்குப் பணம் வழங்க மறுத்தால் அது 3 வருடங்கள் தண்டனைக்குரிய குற்றமாகும் - என்றார். (ம)

# தேர்தல் பிற்போடப்படின் மக்கள்போர் வெடிக்கும்!

## விஜித ஹேரத் மிரட்டல்தொனி

கொழும்பு, ஜன. 23

உள்ளூராட்சித் தேர்தல் பிற்போடப்படுமானால் மக்கள் புரட்சியின் 2ஆவது அலை உருவாகும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தேர்தல் என்பது மக்களுக்கான உரிமை. அதனை எவரும் தட்டிப்பறிக்க முடியாது. அவ்வாறு முற்பட்டால் மக்கள் நிச்சயம் வீதியில் இறங்குவார்கள். அது மக்கள் போராட்டத்தின் 2ஆவது அலையாக அமையும். தேசிய மக்கள் சக்திக்கான வெற்றிவாய்ப்பு பிரகாசமாக உள்ளது. எமது கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

இதன்படி மாத்தறை மாநகரசபைக்கு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தியும், கம்பஹா மாநகரசபைக்கு மஹிந்த ஜயசிங்கவும், அநுராதபுரம் நகரசபைக்கு முன்னாள் எம்.பி. வசந்த சமரசிங்கவும் போட்டியிடுகின்றனர்" - என்றார். (ம-44)

**நாளை** 24.01.2023 செவ்வாய்க்கிழமை தை 10

சுபநேரம் : 11.06 - 12.36
ராகுகாலம் : 03.36 - 05.06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சி பலன்கள் 2023



மனித வாழ்வுக்கு ஓர் அர்த்தத்தை ஏற்படுத்தும் கிரக மூர்த்தி சனீஸ்வரர். கிரகங்களில் மெல்ல நகர்பவர். நீதிமானாகச் செயற்பட்டு அவரவரின் முன்வினைகளுக்கு ஏற்ப உரிய பலாபலன்களைக் கொடுத்து, மனித வாழ்வுக்கு ஓர் அர்த்தத்தை ஏற்படுத்தும் கிரக மூர்த்தி சனீஸ்வரர்.

'ஏழரைச் சனி' என்றதும் பயம் கொள்ளத் தேவையில்லை. அப்படியே அஷ்டமத்துச் சனி, ஜன்மச் சனி போன்ற நிலைகளை எண்ணியும் கலங்க வேண்டியதில்லை. சனி பகவான் நம் வினைகளைக் கரைக்க அருள்செய்பவர்; இன்பதுன்பங்களை வினைப் படி செயற்படுத்தி வாழவைப்பவர்.

**நிகழும் சுபகிருது வருடம் தை மாதம் 3ஆம் நாள் (17.01.2023) செவ்வாய்க் கிழமை அன்று (திருக்கணிதப் பஞ்சாங்கப்படி), தன் சொந்த வீடான மகர ராசியிலிருந்து மற்றொரு சொந்தவீடான கும்பத்துக்கு பெயர்ச்சி ஆகிறார் சனிபகவான்.** இதனால் தனுசு ராசிக்கு ஏழரைச் சனி காலகட்டம் நிறைவடைகிறது. மீன ராசிக்கு ஏழரைச் சனி தொடங்குகிறது. மகர ராசியினருக்கு ஜன்மச்சனி விலகு கிறது.




இதுவரை லாபத்தில் இருந்த சனிபகவான், இப்போது ஏழரைச் சனியாக விரயத்தில் வருகிறார். எனினும் இயன்றவரையிலும் விரயங்களைச் சுப விரயமாக நாம் மாற்றிக்கொள்ளலாம். வீடு, நிலம், மனை வாங்குவது, வாகனங்கள் வாங்குவது என்று செயற்படலாம். விரயச் சனி நிகழும் காலத்தில், திட்டமிட்டு செயற்பட்டால் மன அழுத்தமோ, பொருளாதார இழப்போ ஏற்படாது.

இந்தச் சனிப் பெயர்ச்சிக் காலத்தில் உங்களுடன் குடும்பத்தில் ஒற்றுமை பலப்படும்; குதூகலம் கூடும். இதுவரை இருந்துவந்த மருத்து வச் செலவுகள் குறையும். சகோதர, சகோதரிகளுடன் உறவுகள் மேம்படும். புதிய வியாபார முயற்சிகளில் வெற்றி உண்டு. எந்த வேலையில் ஈடுபட்டாலும், முதலில் குலதெய்வப் பிரார்த்தனை செய்வது நல்லது. அப்போது காரியங்களில் ஜெயம் உண்டாகும். எனினும் அவ்வப் போது மனக்குழப்பங்கள் வந்துபோகும். ஆகவே, நண்பர்கள் மற்றும் பெரியவர்களிடம் ஆலோசனைகள் பெறுவது சிறப்பு. கலைத்துறை, அரசுப் பணிகளில் உள்ளோருக்கு முன்னேற்றம் உண்டாகும்.

**பெண்களுக்கு:** ஆரோக்கியம் மேம்படும். குழந்தைப்பேறு வேண்டி சிகிச்சை எடுத்துவரும் பெண்களுக்கு, நல்ல பலன் கிடைக்கும். எனினும் இந்தச் சனிப்பெயர்ச்சி, பணியிடத்திலும் குடும்பத்திலும் அதீத வேலைகளை, பொறுப்புகளைத் தருவதாக அமையும். புதியவர்களிடம் எச்சரிக்கை தேவை. வாகனங்க ளில் வெளியூர்ப் பயணம் மேற்கொள்ளும்போது கவனம் தேவை. கணவன், மனைவி உறவு சிறப்பாக இருக்கும். எனினும் வீட்டில் வீண் விவாதங்களைத் தவிர்க்கவும்.

**மாணவர்களுக்கு:** படிப்பு, ஆரோக்கியம் இரண்டிலுமே அதீத கவனம் தேவை. சோம்பலைத் தவிர்க்கவும். புதிய நட்புக்களைச் சற்றுத் தள்ளி வைப்பது நல்லது. எவ்விதப் பிரச்னைகள் என்றாலும் பெற்றோரிடம் பகிர்ந்துகொள்ளவும். தினமும் விநாயகர் அகவல், சரஸ்வதிக் கவசம், ஹயக்ரீவர் காயத்ரீ ஜபித்தால் நல்ல பலன்கள் வாய்க்கும்.

**உத்தியோகத்தர்களுக்கு:** பணியிடத்தில் பேரும் புகழும் கிடைக்கும். அதேநேரம், பணியில் அதீத கவனம் தேவை. உயர் அதிகாரிகள், சக ஊழியர்களால் பிரச்னைகள் வரலாம். பேசும்போது கவனம் வேண்டும். உயர் பதவிகளில் இருப்பவர்களுக்குச் சற்று சோதனை காலம் இது. அதை சாதனையாக மாற்றுவது உங்கள் கையில் உள்ளது.

**வியாபாரிகளுக்கு:** திய தொழில்களில் இப்போது இறங்கவேண்டாம். தொழிலில் எச்சரிக்கை அவசியம். கடன் விடயத்தில் கவனமுடன் செயற்படுவது அவசியம். கூட்டுத் தொழிலில் புதிய முயற்சி வேண்டாம்.

**பரிகாரம்:** வியாழக்கிழமைகளில் ஆஞ்சநேயரை வணங்கலாம். உதவி செய்யுங்கள்; நன்மைகள் தேடி வரும். அன்னதானம் செய்வதால், காரிய ஜெயம் உண்டாகும்.

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு திடீர் பணவர வுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த செய்தி கிடைக்கும். மகிழ்ச்சி உண்டா கும். விற்பனை அதிகரிக்கும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் அதிக ரிக்கும். தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்து விடுவீர்கள். எதிர்பார்த்த காரியம் நல்ல படி முடியும்.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் கிடைக்கும். வீண்செலவுகள் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். இழுபறியாக இருந்த காரியம் அனுகூலமாகும்.

**கடகம்:** உற்சாகமாகக் காணப்படு வீர்கள். கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். நன்மை உண்டாகும். மற்ற வர்களுடன் பேசும்போது பொறுமை யைக் கடைப்பிடிக்கவும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடு வீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மகிழ்ச்சி தரும் தகவல் கிடைக்கும்.

**கன்னி:** குடும்பத்தில் சில பிரச்சினை கள் ஏற்படக்கூடும். முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோ சனை அவசியம். புதிய முயற்சி களைத் தவிர்ப்பது நல்லது.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக் கூடும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. அந்நியோன்யம் அதிகரிக் கும்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். திடீர் செலவுகளால் கையிருப்புக் கரையும். மகிழ்ச்சி ஏற்படும்.

**மகரம்:** எதிர்பாராத வாய்ப்புகள் ஏற்படும். சில பிரச்சினைகள் ஏற்ப டக்கூடும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. எதிர்பார்த்த காரி யம் அனுகூலமாக முடியும்.

**கும்பம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சில வேலை களை எடுத்துச் செய்யவேண்டி வரும். தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வகை யில் சிற்சில சங்கடங்களைச் சமா ளிக்கவேண்டி வரும்.



கச்சாய் மகா வித்தியாலயத்தில் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் அதிபர் கா.குணசிங்கத்துக்கான மணிவிழாவும் மலர் வெளியீடும் நேற்றுமுன் தினம் சனிக்கிழமை வித்தியாலய பிரதான மண்டபத்தில் அதிபர் ஐ.தேவ ராஜன் தலைமையில் இடம்பெற்றது. தொடர்ந்து க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்த 5 மாணவிகளுக்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதம் லண்டன் பழைய மாணவர் சங்கத்தால் வழங்கப்பட்டது. (ச-159)

## புனருத்தாரண நிகழ்வு

கொடிகாமம், ஜன. 23

தென்மராட்சி மீசாலை அருள் மிகு திருநீலகண்ட வெள்ளை மாவடி விநாயகர் தேவஸ் தான புனருத்தாரணத்தின் ஆரம்ப நிகழ்வாக உட்புற சுற்றுக் கொட்டகைக்கான அத்தி பாரமிடும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறும். அனைத்து அடியார்களை யும் கலந்துகொள்ளுமாறு ஆலய திருப்பணிச்சபை யினர் கேட்டுக்கொண்டுள்ள னர். (ய-159)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜன. 23

ஏழாலை தெற்கு வசந்தபுரம் களபா வோடை வசந்த நாகபூஷணி அம் பாள் தேவஸ்தானத்தின் மஹோற் சவம் எதிர்வரும் 27ஆம் திகதி வெள் ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக வுள்ளது. தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ள மஹோற்சவத்தில் சப்பறத்திருவிழா எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி வெள்ளிக்கிழ மையும் தேர்த்திருவிழா 4ஆம் திகதி சனிக்கிழமையும் தீர்த்தத்திருவிழா 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெறவுள்ளது என்று தேவஸ்தா னத்தினர் அறிவித்துள்ளனர். (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 945 கிலோ மஞ்சள் கடற்படையால் மீட்பு

### இருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 23

குருநகர் மற்றும் மண்டைதீவு ஆகிய கடற்பகுதிகளில் இலங்கைக் கடற்படையினரால் கடந்த வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது மஞ்சளைக் கடத்திய குற்றச்சாட்டில் இரண்டு பேர் கைதுசெய்யப்பட்டனர்.


மண்டைதீவு கடற்பரப்பில் சந்தேகத்துக்கு இடமாகக் காணப்பட்ட டிங்கி படகொன்றை சோதனையிட்டபோது 496 கிலோ 54 கிராம் எடையுள்ள காய்ந்த மஞ்சள் கடத்திவரப்பட்டமை இனங்காணப்பட்டு இந்தக் கடத்தல் முறியடிக்கப்பட்டது.

கடற்படையினரைக் கண்டதும் சந்தேக நபர்கள் மஞ்சளைக் கடலில் வீசினார்கள் என்றும் அதன் பின்னர் மஞ்சளும் மீட்கப்பட்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று கடற்படையினரின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை குருநகருக்கு அருகில் சந்தேகத்துக்கிடமாகக் காணப்பட்ட படகொன்றை சோதனை செய்தபோது 445 கிலோ 800 கிராம் எடையுள்ள காய்ந்த மஞ்சள் கைப்பற்றப்பட்டது. இந்தத் தேடுதல் நடவடிக்கைகளின் போது மன்னாரைச் சேர்ந்த இருவர் சந்தேகநபர்களாகக் கைது செய்யப்பட்டனர். கைப்பற்றப்பட்ட மஞ்சளுடன் சந்தேகநபர்கள் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளனர். (ம-14-213)

# படைப்புழுவின் தாக்கம்: சோளச்செய்கை பாதிப்பு

### விவசாயிகள் கவலை



கிளிநொச்சி, ஜன. 23

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளில் சோளப் பயிர்களில் படைப்புழுவின் தாக்கம் அதிகரித்துள்ளது. இதனால் சோளச்செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்ததாவது:-

புளியம்பொக்கணை கமநலசேவை பிரிவுக்குட்பட்ட தருமபுரம் பகுதியில் சோளப் பயிர்ச்செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

சோளச்செய்கை மேற்கொள்ளப்பட்டு இரண்டு மாதம் கடந்த நிலையில் படைப்புழுவின் தாக்கம் மிகவும் சடுதியாக அதிகரித்து காணப்படுகின்றது.

கிருமிநாசினி விசிறப்பட்டிருந்த போதிலும் முற்றுமுழுதாகப் படைப்புழுவைக் கட்டுப்படுத்த முடியாத நிலை தோன்றியுள்ளது.

உரிய கிருமிநாசினி பெற முடியாததாலும் சோளப் பயிர்ச்செய்கைக்குரிய விளக்கம் இல்லாததாலும் இந்த முறை மேற்கொள்ளப்பட்ட சோளச்செய்கையில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

தற்போது சிறிய அளவில் சோளப்பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருந்த போதிலும் படைப்புழுவின் தாக்கம் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளதால் இனிவரும் காலங்களில் சோளப் பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படும்.

எனவே இதுதொடர்பாக விவசாயத் திணைக்கள அதிகாரிகள் சோளப் பயிர்ச்செய்கைக்கான முழு விளக்கத்தையும் நோய்த்தாக்கத்துக்கான அறிவுறுத்தலையும் எமக்கு தெரியப்படுத்த வேண்டும் - என்றனர். (ம-14-113)

### பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி நிலையங்கள் முன்பாக

## தேவையற்று நடமாடுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 23

பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி நிலையங்கள் முன்பாக அநாவசியமாக நடமாடும் குழுக்களுக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுஅமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

இது தொடர்பில் பொதுஅமைப்புகள் சில ஒன்றிணைந்து வலியுறுத்தியுள்ளதாவது:

மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனைகள் அதிகரித்துள்ளன. அதைக் கட்டுப்படுத்த போதைப்பொருளுக்கு எதிராக மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்ற நிலையில், பாடசாலைகளை சூழவுள்ள பகுதிகளில் சைக்கிள், மோட்டார் சைக்கிள், ஓட்டோ உள்ளிட்ட வாகனங்களில் சிலர் தேவையற்று நடமாடுகின்றனர்.

அவ்வாறானவர்கள் மாணவர்களுக்கு போதைப்பொருள் விற்பனை செய்யும் வலையமைப்பை சேர்ந்தவர்களாக இருக்கலாம் என எமக்கு பலத்த சந்தேகம் உள்ளது. ஏனெனில் அவர்களின் நடமாட்டங்கள், ஆடைகள் என்பவை சந்தேகத்துக்கு உரியதாகவே உள்ளன. அத்துடன் மாணவிகளுடன் சேட்டை விடுவது, விதிமுறைகளை மீறி போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் வாகனங்களை செலுத்துதல் போன்ற குற்றச்செயல்களிலும் அவர்கள் ஈடுபடுகின்றனர். எனவே உரிய தரப்பினர் இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் - என்றனர். (ம-14-20)

## கும்பாபிஷேகம்

சாவகச்சேரி, ஜன. 23

தொன்மை வாய்ந்த ஆலயமான மீசாலை பன்றிக்கேணி கந்தசுவாமி கோயிலின் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதேவேளை 25ஆம் திகதி புதன்கிழமை காலை 5:30 மணிக்கு கர்மாரம்பமும் 26ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை பால் காப்பும் எண்ணெய்க்காப்பும் நடைபெறும் என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ய)

## வன்முறைக் கும்பல் வீடுபுகுந்து தாக்குதல்

### கோண்டாவிலில் அடாத்து

யாழ்ப்பாணம், ஜன. 23

கோண்டாவில் கிழக்கு பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் நுழைந்த கும்பல் வீட்டின் உடைமைகளைச் சேதப்படுத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளது என கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வன்முறைச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது. முறைப்பாட்டுக்கமைய கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-27)

## எழுவைதீவு கடற்பரப்பில் 10,000 கிலோ கும்பிளா!

யாழ்ப்பாணம், ஜன. 23

எழுவைதீவுக் கடற்பரப்பில் 10 ஆயிரம் கிலோவுக்கும் மேற்பட்ட கும்பிளா மீன் பிடிபட்டது என்று மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை தொழிலுக்குச் சென்ற அனைத்து மீனவர்களுக்கும் பெருமளவு கும்பிளா மீன் பிடிபட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-14-9)

## கசிப்புடன் நபர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 23

தெல்லிப்பழைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டுவன் பகுதியில் கசிப்புடன் 28 வயதான நபரொருவர் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார் என்று தெல்லிப்பழைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பொலிஸாரின் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது இந்தக் கைது முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது 80 லீற்றர் கசிப்புக் கைப்பற்றப்பட்டதோடு கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர், சான்றுப்பொருள்களுடன் தெல்லிப்பழைப் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டார். அதனையடுத்து சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தெல்லிப்பழைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-14-23-27)

## மனநலம் பாதிக்கப்பட்டோருக்கு சிறப்புக் கண்காணிப்பு

### வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 23

மனநலம் பாதிக்கப்பட்டோரைப் புறக்கணிப்பதற்கு வடக்கு மாகாணத்தில் இடமில்லை. அவர்களுக்கு தீவிரமான வழிகாட்டல்களும் கண்காணிப்புக்களும் வழங்கப்பட்டு வருகின்றது. இந்த நிலைமை இனிவரும் நாள்களில் இன்னும் மேம்படுத்தப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் நான் ஆளுநராகப் பதவியேற்ற காலத்தில் மனநலம் குன்றியவர்கள் மற்றும் ஓட்டிசம் நோயால் பாதிக்கப்பட்டவர்களை மாவட்ட ரீதியாக ஒருங்கிணைக்கக்கூடிய நடைமுறை காணப்படாமை அவதானிக்கப்பட்டது.

இந்த நிலையில் குறித்த செயற்றிட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்காக சுகாதார அமைச்சின் கீழ் இணைப்பாளராக வைத்தியர் ஒருவரை நியமித்து இது தொடர்பில் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மனநலம் பாதிக்கப்பட்டவர்களை சரியான முறையில் பராமரித்து அவர்களுக்கான சிகிச்சைகள் வழிகாட்டல்கள் மாகாணத்தில் வழங்கப்படவேண்டுமே தவிர புறக்கணிப்புக்கு மாகாணத்தில் இடம் வழங்கப்படமாட்டாது.

வடமாகாணத்திலுள்ள சகல மாவட்டங்களையும் இணைக்கக்கூடிய வகையில் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான சிகிச்சைமுறை சுகாதார அமைச்சுக்குள்ள அதிகார நடைமுறைகளைப் பின்பற்றி செயற்படுத்தப்படும் - என்றார். (ம-14-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலலும், அந்தியேட்டி அழைப்பும்



**கடந்த 08.01.2023 சனிக்கிழமை அதிகாலை காலஞ்சென்ற**

**எங்கள் குடும்பத் தலைவர்**

**ஈழ நல்லூர் லய நாதவித்தகர்**

## அமரர் பிச்சையப்பா ரவீந்திரன் (ரவி)

அவர்களது மரணச் செய்தியைக் கேள்வியுற்று நேரில் சமுகந்தந்தோர்க்கும் வெளிநாடு, உள்நாட்டிலிருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோர்க்கும் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டு அஞ்சலி செலுத்தியவர்க்கும், இன்று வரை எமது துயரத்தில் தம்மை இணைத்துக் கொண்டு அன்ன ஆகாரம் வழாங்கிக் கொண்டிருக்கும் அத்தனை உள்ளங்களிற்கும், யா/ கனகரத்தின மத்திய மகாவித்தியாலயம், சாரங்கம் இசைமன்றம் ஆகிய குழுமத்தினருக்கும், உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்களுக்கும், அன்போடு கூடிய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதிய போசனமும் இன்று (23.01.2023) திங்கட்கிழமை நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற உள்ளது. இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொண்டு அனைவரும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.


**அன்னாரின் சகோதரர்,**

**ஈழநல்லூர் நாதஸ்வர வித்துவான்,**

**P.S. பிச்சையப்பா ரஜீவன்.**

(CS 23072) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலத்திரனியல் மயப்படும் கிளி. ஸ்கந்தபுரம் நூலகம்

கிளிநொச்சி, ஜன. 23

கிளிநொச்சி- ஸ்கந்தபுரம் நூலகம் புதுப்பொலிவுடன் இலத்திரனியல் நூலகமாக மாற்றியமைக்கப்பட்டு வருகின்றது என்று கரைச்சிப் பிரதேசசபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கரைச்சி பிரதேசசபையின் 6 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் இந்த இலத்திரனில் நூலகம் அமைக்கப்படுகிறது. இதற்கென முதற்கட்டமாக 2 மில்லியன் ரூபாவில் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

ஸ்கந்தபுரம் நூலகத்தை இலத்திரனியல் நூலகமாக மாற்றுவதன் மூலம் அக்கராயன் மகா வித்தியாலயம், அக்கராயன் ஆரம்பப் பாடசாலை, ஸ்கந்தபுரம் இல.1, இல.2 பாடசாலைகள், கோணாவில் மகா வித்தியாலயம், யூனியன்குளம் பாடசாலை, கண்ணகைபுரம் பாடசாலை, முக்கொம்பன் மகா வித்தியாலயம், வன்னேரிக்குளம் மகா வித்தியாலயம், ஆனைவிழுந்தான் பாடசாலை மற்றும் அமதிபுரம், ஆரோக்கியபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள பாடசாலைகளின் மாணவர்கள் பயனடைவர்- என்றார். (ச-13)


**Chemistry(இரசாயனவியல்)**

கொழும்பில் நீண்ட காலம் கற்பித்த ஆசிரியரால் தனி அல்லது குழுவாக, தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலத்தில் கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 076 778 1442

**GERMAN LANGUAGE**

- German O/L & A/L Classes
- A1, A2 and B1 Classes
- German Speaking Classes
- Exam Preparation Classes
- German for beginners

Conducting in English Medium

Conducted by Miss.J.A.H Jayasinghe
(B2 qualified at Goethe Institute - Srilanka.

WhatsApp - 076 875 3361 Contact : 070 426 7321

(CS 23093)(3/6)


## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் வினாயகமூர்த்தி

அன்னை மடியில் 13.10.1943

ஆண்டவன் நிழலில் 21.01.2023



சுதுமலை தெற்கை பிறப்பிடமாகவும், தாவடி வடக்கு, இணுவில் மேற்கு, மாங்குளம் ஆகிய பகுதிகளில் வசித்து வந்தவரும், தற்போது குட்செட் வீதி, தோனிக்கல் வவுனியாவை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரி வைத்திலிங்கம் வினாயகமூர்த்தி அவர்கள் கடந்த (21.01.2023) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை நல்லம்மா தம்பதியரின் மருமகனும், அரியநாயகத்தின் அன்புக் கணவரும், மாலதி (பிரான்ஸ்), மைதிலி (வ/விபுலானந்தா கல்லூரி ஆசிரியை), மாலினி (லண்டன்), சஜிந்தன் (எஸ்.எஸ். இணுவில் கந்தன் பயணிகள் சேவை நிறுவனத்தின் உரிமையாளரும் மற்றும் யாழ். தூரசேவைப் பேரூந்து உரிமையாளர் கம்பனியின் தலைவரும்), பாமினி (வ/சைவப்பிரகாச மகளீர் கல்லூரி ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தந்தையும், உதயகுமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற தவறஞ்சன் மற்றும் ரமேஸ்குமார் (நில அளவையாளர்), சகுந்தலா ஆகியோரின் மாமனாரும், விக்னா, சுபதினி, திலக்சனா, தர்சனா, செந்தாழன், அஹாஸ்ஜி, அம்ஷா, பானுஜா, டினுசியன், மேனுஜன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் சகோதரரும், முருகையா, செல்வேந்திரன், காலஞ்சென்ற சுபாஸ் சந்திரன் மற்றும் செல்வராணி, கருணாநிதி, வரதன், ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது 130/8-4, குட்செட் வீதி, முதலாம் ஒழுங்கை, தோணிக்கல், இல்லத்தில் இன்று (23.01.2023) திங்கட்கிழமை நடைபெற்று, பி.ப 2.00 மணியளவில் பூதவுடல் தோனிக்கல் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

130/8-4, குட்செட் வீதி,
முதலாம் ஒழுங்கை,
தோணிக்கல், வவுனியா.

தகவல்: குடும்பத்தினர்.
024 222 4149
(மகன்) V.V.சஜிந்தன் 077 020 4353

(CS 23098)1-6

## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 07 . 1944



மறைவு 20 . 01 . 2023

### திருமதி மோகனசெல்வம் மகேஸ்வரி

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மோகனசெல்வம் மகேஸ்வரி அம்மா கடந்த (20.01.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்வர்களான சுப்பிரமணியம், இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மோகனசெல்வம் அவர்களின் அன்பு மனைவியும், மோகனேஸ்வரி (பாப்பா - France), காலஞ்சென்ற விஜயகுமாரன், மோகனேஸ்வரன் (மோகன் - London), இராஜேஸ்வரன் (ராசன் -London) ஆகியோரின் அன்புத் தாயாரும், அரசரெத்தினம் - France), ஆனந்தி, ஹேமாவதி, தனலக்சுமி ஆகியோரின் அன்பு மாமியாரும், அஸ்வினி, அபிராமி, அஜித், ஜெனார்த்தன், ஜிகார்த்தன், நிரோஜன், நிதுசன், ஆர்த்திகா, அக்சயா, நிவேதன், அபிர்நயா, அபினாஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.01.2023) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் ஆவரங்கால், மாக்கற் லேனில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பின்னர் ஆவரங்கால் கரதடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீராம் - 0094 774 401 941

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 04 . 1949



மறைவு 21 . 01 . 2023

### திருமதி சறோயினிதேவி மாசிலாமணி

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தி காளிகோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சறோயினிதேவி மாசிலாமணி நேற்றுமுன்தினம் (21.01.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், பவளரத்தினம், வடிவேலு, நல்லமலர் ஆகியோரின் வளர்ப்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம் சௌபாக்கியவதி தம்பதியரின் அன்பு மருமகளும், மாசிலாமணியின் பாசமிகு மனைவியும், ஜெயரூபன், தாரணி, ஜெனார்த்தனன் (பிரான்ஸ்), பிரசாந் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரஜனி, கோபிநாத், மிர்ஜனா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், வேணுஷன், ஜெயகீதன், சங்கீதன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2023) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்

077 748 4460, 076 299 7454, 077 673 6949

(cs 23094) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சிப் பிரதேசத்தில் கால்நடைகள் தொடர் களவு

## பண்ணையாளர்கள் விசனம்

சாவகச்சேரி, ஜன. 23

தென்மராட்சிப் பிரதேசத்தில் மேய்ச்சலுக்குக் கட்டப்படும் மாடுகள் அண்மைக் காலமாக இனந்தெரியாதோரால் களவாடப்பட்டு வருகின்றன. இதனால் எமது வாழ்வாதாரம் இழக்கப்படுகிறது என பிரதேச பண்ணையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தற்போது வயல்களில் காலபோக பயிர்ச்செய்கை மேற்கொள்ளப் பட்டு வருவதால் தென்னந் தோட்டங்கள் மற்றும் கோயில் வளாகங்கள் உள்ளிட்ட இடங்களில் மாடுகள் கட்டப்படுகின்றன. ஆள்நடமாட்டமற்ற வேளையில் வாகனங்களில் வருவோர் கட்டப் பட்டிருக்கும் மாடுகளை பட்டப்பகலிலேயே கடத்திச்செல்கின்றனர்.

இதுதொடர்பில் பொலிஸார் மற்றும் சாவகச்சேரி கால்நடை வளர்ப்பு கூட்டுறவுச் சங்கத்துக்கு தெரியப்படுத்தப்பட்டபோதும் அவர்களால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதனால் எமது ஜீவனோபாயம் இழக்கப்பட்டு வாழ்வாதாரம் பாதிக் கப்படுகிறது. எனவே சம்பந்தப்பட்ட தரப்பில் கால்நடைகள் களவாடப்படுவதை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றனர்.

கால்நடைகள் திருட்டுத் தொடர்பில் சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவரை தொடர்புகொண்டபோது, பிரதேசத்தில் அண்மைக்காலமாக பத்துக்கு மேற்பட்ட மாடுகள் திருட்டுப் போயுள்ளன எனப் பண்ணையாளர்களால் முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளன. இனந்தெரியாதோர் மாடுகளை வாகனங்களில் கொண்டு செல்வதால் அவற்றைக் கண்டுபிடிக்கமுடியவில்லை. கால்நடைகளுக்கான பதிவுகளை மேற்கொள்ளும்போது மாடுகளின் காதில் துளையிட்டு இலக்கம் பொருத்தப்படும். அவ்வாறான பதிவுகள் இல்லாத நிலையில் எம்மால் நடவடிக்கை எடுக்க இயலவில்லை.

கால்நடைகளை வளர்ப்போர் சங்கத்தில் பதிவுசெய்து அதற்கான இலக்கங்களைப் பெற்று கால் நடைகளுக்கு பொருத்தப்படின் மாடுகளை இனங்காண்பது சுலபமாக இருக்கும் - என்றார். (ச-9)

# நெற்செய்கையாளர்களுக்கு ஊக்குவிப்பு நிதி வழங்கல்

சாவகச்சேரி, ஜன. 23

விவசாய அமைச்சின் அறிவிப்பின் பிரகாரம் நெற்செய்கையாளர்களுக்கு விவசாய ஊக்குவிப்பு நிதி வழங்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதன்படி தென்மராட்சிப் பிரதேச நெற்செய்கையாளர்களுக்கு அந்தந்த கமநல சேவைகள் நிலையத்தால் அவர்களின் வங்கிக் கணக்குக்கு நிதி அனுப்பிவைக்கும் பணிகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன என்று நெற்செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒரு ஹெக்ரேயர் பரப்புக்கு விதைப்பை மேற்கொண்ட விவசாயிகளுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதமும் அதற்கு மேற்பட்ட பரப்பளவில் செய்கை மேற்கொண்ட விவசாயிகளுக்கு தலா 20 ஆயிரம் ரூபா வீதமும் ஊக்குவிப்பு நிதி வழங்கப்படுகின்றது. (ஒ-14.9)

# கல்வியியற் கல்லூரிக்கான நேர்முகத் தேர்வு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 23

யாழ்.கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரிக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 25ஆம் திகதி ஆரம்பமாகி 29ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது எனக் கல்லூரியின் பீடாதிபதி அறிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கான புதுமுக மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கை ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

அதற்கமைய நேர்முகத் தேர்வு இந்தமாதம் ஆரம்பிக் கப்பட்டு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி வரை நடத்தப்படும் என உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்பிரகாரம் யாழ்.கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் புதுமுக மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 25ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன எனக் கல்லூரி நிர்வாகம் அறிவித்துள்ளது. (ச-20)


" ஓம் விராட் விஷ்வப் பிரம்மனே நமஹ "

# மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 07 . 1936



மறைவு 21 . 01 . 2023

## திருமதி துரைராசா சத்தியபாமா

கரம்பன் கிழக்கு காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு விவேகானந்தா மேடு மற்றும் யாழ்ப்பாணம் நீராவியடியை (கடையிற்சுவாமி கோயிலடி) வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துரைராசா- சத்தியபாமா கடந்த 21.01.2023 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா துரைராசாவின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான முத்தையா பொன்னம்மாவின் அன்பு மகளும், காலஞ்சென்ற பூபதியின் பெறாமகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா நாகம்மாவின் மருமகளும், மனோகரனின் நேசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராசுபதி, தியாகராஜா, மகேஸ்வரி, பூபாலசிங்கம், யோகம்மா, இராஜகோபால், ஈஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆனந்தி, ஸ்கந்தராஜா, ஸ்ரீதரன், சத்தியராஜா, சற்குணராஜா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயக்குமாரன், லலிதாதேவி, சித்திரா, சுதர்சினி, சிந்துஜா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கனிமொழி, கேதாயினி, தர்சிகா, கோகுல்ராஜ், சஜிதா, லக்ஸ்மிகாந்த், நவீனன், அட்சயா, சஹானா, ரோகிற், அனன்யா, கஜேந்திரன், பிரசாத், ஜெசித், ஆகியோரின் நேசமிகு பேர்த்தியும் ஆதிரனின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.23/4,
கடையிற்சுவாமி கோவில் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 557 9322



# மரண அறிவித்தல்

பிறப்பு 02 . 05 . 1959



இறப்பு 22 . 01 . 2023

## திரு. தம்பையா திருவானந்தராஜா (B.Sc. Dip in. Ed)

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

வடமராட்சி கொற்றாவத்தையைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு. தம்பையா திருவானந்தராஜா நேற்று (22.01.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் யா/சிதம்பரா கல்லூரி, கொ/விபுலானந்தா கல்லூரி, கொ/அல்ஹஜிரா முஸ்லீம் வித்தியாலயத்தில் கணித பாட ஆசிரியராக கடமையாற்றினார். காலஞ்சென்ற தம்பையா - கற்பகம் தம்பதிகளின் அன்புப்புதல்வனும், கோகுலரணி (ஆசிரியை, C/St.Mary's T.M.V) இன் அன்புக் கணவரும், சஜிதா (UK), மஹிராஜ் (HCL lanka PVT Ltd), நோஷிக்கா (கொ/ ராமநாதன் இந்து மகளீர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், துஷ்யந்தனின் (UK) அன்பு மாமனாரும், காலஞ்சென்ற கதிர்காமராஜா, சிவராணி, காலஞ்சென்ற திருஞானராஜா, கலாராணி (Germany), ராஜகௌரி (France), ஸ்ரீபாலகிருஷ்ணன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இன்று (23.01.2023) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிமுதல் மாலை 4.30 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப் பட்டு பின்னர் தகனக்கிரியைக்காக கல்கிசை பொது மயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், மாணவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மகன் : 077 152 8617 (CR 39097) (3/6)

தகவல்:
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சியைத் தொடர்ந்து மாகாணத் தேர்தலும் நடக்கும்!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 23

உள்ளூராட்சித் தேர்தலைத் தொடர்ந்து மாகாணசபைத் தேர்தலையும் நடத்துவதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். மாகாணசபைத் தேர்தலை நடத்த முடியாத அளவுக்கு சட்டச் சிக்கலை ஏற்படுத்தியவர்கள்தான் தற்போது ஜனநாயகம், மக்களின் வாக்குரிமை தொடர்பில் குரல் எழுப்புகிறார்கள் என்றும் அவர் சாடினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரி வித்ததாவது:-

நாடு என்ற ரீதியில் மிக மோசமான பொருளாதாரப் பின்னடைவை எதிர்கொண்டுள்ளோம். நலன்புரிச் சேவைகள், எரிபொருள் மற்றும் எரிவாயு இறக்குமதி மற்றும் அரச சேவையாளர்களுக்கு சம்பளம் வழங்கல் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளுக்கு நிதி ஒதுக்குவது பெரும் போராட்டமாக உள்ளதை நிதியமைச்சின் செயலாளர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

நாட்டு மக்களின் ஜனநாயக உரிமையை முடக்க வேண்டிய தேவை எமக்கு இல்லை. நிதி நெருக்கடிக்கு மத்தியில் அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்ற வேண்டிய கட்டாயம் அரசாங்கத்துக்கு உள்ளது. உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்தவேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்துகின்றன. தேர்தலுக்கு அரசாங்கம் தயாராக உள்ளது.

மாகாணசபைத் தேர்தலை நடத்த முடியாத அளவுக்குச் சட்டச் சிக்கலை ஏற்படுத்தியவர்கள் தற்போது ஜனநாயகம், தேர்தல் உரிமை தொடர்பில் குரல் எழுப்புகிறார்கள். உள்ளூராட்சிமன்றத் தேர்தலை பிற்போட வேண்டிய தேவை எமக்கு கிடையாது.

அரசியலில் வெற்றி, தோல்வி ஆகியவற்றை அரசியல்வாதிகள் முழுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

உள்ளூராட்சிசபைத் தேர்தலை தொடர்ந்து மாகாணசபைத் தேர்தலை நடத்த எதிர்பார்த்துள்ளோம்.

மாகாணசபை தேர்தல் பல பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்கும் - என்றார். (ம)

# பற்றைக்குள்ளிருந்து துப்பாக்கி மீட்பு!

ஜாஎல, பற்றைப் பிரதேசமொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ரி-56 துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றப்பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், மேற் கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போதே இந்தத் துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம)


## தவறிவிட்டது

கடந்த (20.01.2023) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் அச்சுவேலி தெற்கு உலவிக்குளம் பிள்ளையார் கோயிலுக்கும் - சங்க வீதிக்கும் இடையில் பேஸ் (பணப்பை) முக்கிய ஆவணங்களுடன் (ID, Driving License, Tax, Insurance) தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தந்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**திருநாவுக்கரசு தவராஜா**
**077 604 8444 செல்லக்கண்டு ஸ்ரீகுகன்**
**சிகரம் பிளாஸா.**
(தொடர்புகொள்ளவும்.)

## மரண அறிவித்தல்

தோற்றம் 21.08.1962

**சதாசிவம் செல்வராசா**

மறைவு 22.01.2023



சரவணையைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் செல்வராசா அவர்கள் நேற்று (22.01.2023) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - யோகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெகதீஸ்வரி (ஜெயா) அவர்களின் அன்புக் கணவரும், சோபனா, தீபிகா, காவிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சறோஜாதேவியின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2023) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலிகோயில் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல் :
**குடும்பத்தினர்.**
**077 623 7627**

## மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 11 . 1938

மறைவு 21 . 01 . 2023



**திரு.சுப்பிரமணியம் சின்னத்துரை (இரத்தினசிங்கம்)**

**(முன்னாள் பணியாளர் தென்மராட்சி மேற்கு பலநோக்கு கூட்டுறவு சங்கம்- கைதடி)**

கைதடி மத்தி குமரநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சின்னத்துரை கடந்த (21.01.2023) சனிக்கிழமை இரவு 11.00 மணியளவில் காமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிவமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மார்கண்டு, சின்னையா, வீரகத்தி மற்றும் சீதேவி, சறோஜினிதேவி, நவமணி, சின்னத்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரனும், தயாளினி, தயாநிதி (லண்டன்), சாந்தமூர்த்தி பாலசுப்பிரமணியம் (சுவிஸ்), கமலன் - தனுசியா (பிரான்ஸ்), பிரியதர்சினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மற்றும் பாலச்சந்திரன், பரமேஸ்வரன் (லண்டன்), கிருத்திகா (சுவிஸ்), தர்சினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், புதுக்குடியிருப்பு பிரதேச சபை), மதிநதியன் (பிரான்ஸ்), அரவிந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தர்மிலா, தர்சிகா, பிரகாஷ், ஜெசிக்கா, நிதுசா, ரோகித், மகிஷா, மகிழினி, பவிஷா, ஆகிஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற சிவயோகன், சிவபாக்கியம் மற்றும் சிவகுரு (ரஞ்சன் ஸ்ரோர்ஸ்), சிவநாதன், சிவதாசன், இலட்சுமி, சிவராணி, காலஞ்சென்றவர்களான கந்தையா, பத்மநாதன் மற்றும் சுந்தரம், ஜெயா, செல்வா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (22.01.2023) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கைதடி கிழக்கு உத்தல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி மத்தி, குமரநகர்.

தகவல்: **குடும்பத்தினர்.**
**077 922 8712**

(CR 39100) 1/6

## மரண அறிவித்தல்

பிறப்பு 27 . 10 . 1974

இறப்பு 22 . 01 . 2023



**மகேஸ்வரன் தனேசன்**

**(ஆங்கில ஆசிரியர், யா/வீமன்காமம் மகாவித்தியாலயம்)**

வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் சுன்னாகம் பெரிய மதவடியை வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரன் தனேசன் 22.01.2023 அன்று இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரன்-இரத்தினேஸ்வரி தம்பதியினரின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான செந்திநாதன்-வேதநாயகம் தம்பதியினரின் அன்பு மருமகனும், தமிழ்ச்செல்வியின் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம்-உடுவில்) அன்புக் கணவரும், கவிசன் (யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை மாணவன்), வர்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும் தனஞ்சயனின் (அமெரிக்கா) அன்புச் சகோதரனும், சுதாகினி(பிரான்ஸ்), றூபச்சந்திரன், மோகனா, சதிஸ்கண்ணன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.01.2023) திங்கட்கிழமை மாலை 4.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


பெரிய மதவடி,
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.

தகவல்: குடும்பத்தினர்
077 502 1503


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 03 . 03 . 1976



இறப்பு 21 . 01 . 2023

## புஸ்பராஜா ராஜ்குமார்

கோப்பாய் தெற்கை பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட புஸ்பராஜா ராஜ்குமார் (கண்ணன்) கடந்த (21.01.2023) சனிக்கிழமை இலங்கையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணப்பிள்ளை புஸ்பராசா (கிப்பி) வசந்த பூங்கோதை தம்பதியரின் மூத்த புதல்வனும், ஜேர்மனியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகிஷா (குட்டி) அவர்களின் அன்புக் கணவரும், மாலினி, பாமினி, அசோக்குமார் (அவுஸ்திரேலியா), ஆனந்தகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும், யுகேந்திரன், ஜேக்கப் (அதிபர், நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்), மேகலா (அவுஸ்திரேலியா), யூஜினா ஆகியோரின் மைத்துனரும், கர்சனா, சுஜி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பெரியப்பாவும், கொட்னிவாஷ், டொறிதா, ஜெயக்குமார், ஜோய்ஷன் பிரசாந், ஆகியோரின் அன்பு மாமனாரும், மனோரஞ்சிதம் (ஜேர்மனி), விநாயகமூர்த்தி (கற்கண்டு), மலர் (ஜேர்மனி), தங்கராணி (ஜேர்மனி), புஸ்பராணி (கனடா), காலஞ்சென்ற செல்வராசா (மெம்பர்) ஆகியோரின் அன்பு மருமகனும், ஜெயராணி, மகேந்திரராசா (ஜேர்மனி), சுகுணா மற்றும் காலஞ்சென்ற ஆனந்தராசா, கனகராசா, யசோ ஆகியோரின் பெறா மகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23.01.2023) திங்கட்கிழமை அவரது கோப்பாய் இல்லத்தில் அஞ்சலிக்காக காலை 7.00 - நண்பகல் 12.00 மணிவரை வைக்கப்படும். பின்னர் இறுதிக்கிரியைகளுக்காக ஜேர்மனிக்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 39099) 1/6

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 27.09.1949 — இறப்பு 15.01.2021

## அமரர் கந்தசாமி சந்திரபாலன்
(ரைக்ரர் சின்னக்கிளி)

ஆண்டுகள் இரண்டு கடந்து சென்று
கொண்டிருந்தாலும் உங்கள் நினைவுகள்
இருபதாயிரம் கோடி ஆண்டுகள் சென்றாலும்
எங்களை வாழவைத்த அன்புத் தெய்வமே!
உங்கள் சந்ததிகள் உள்ளவரை
உங்கள் நினைவுகளுடன் ஆத்மசாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திப்போம்.

டச்சு றோட், உடுவில்,
சுன்னாகம்.

உங்கள் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினர்.

(CS 23099) 1-6

# மரண அறிவித்தல்



அன்னை மடியில் 25.11.1963 — ஆண்டவன் அடியில் 22.01.2023

## திருமதி
## சங்கரப்பிள்ளை தயாநிதி

நாவற்காடு வரணியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சங்கரப்பிள்ளை தயாநிதி அவர்கள் நேற்று (22.01.2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் வைத்திலிங்கம் சங்கரப்பிள்ளை (திருவருள் ஸ்ரோர்ஸ்-கொடிகாமம்) யின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற வேலுப்பிள்ளை சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் செல்லம்மா தம்பதி யரின் அன்பு மருமகளும், வைஸ்ணவி (சுண்டிக்குளி மகளீர் கல்லூரி - ஆசிரியை), வைதேகி, மைத்திரேசி, முகிலவன் ஆகியோரின் அன்புத் தாயாரும், வருன் (4th Dimension Studio), ஜெயந்தன் (Sri Lanka Telecom) ஆகியோரின் அன்பு மாமியாரும், அனாமிசாலின் அம்மம்மாவும், விக்கினேஸ்வரமூர்த்தி, காலஞ்சென்ற விமலேஸ்வரன் (வரதன்) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2023) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் கொடிகாமத்தி லுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொடிகாமம் கட்டை பறித்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வைத்திலிங்கம் சங்கரப்பிள்ளை
(திருவருள் ஸ்ரோர்ஸ்)
தச்சாய் வீதி, கொடிகாமம்.
077 3000 834

தகவல்:
குடும்பத்தினர்

(CR 39098) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேலும் மூவருக்கு அமைச்சுப் பதவி

கொழும்பு, ஜன. 23

பவித்திரா வன்னியாராய்ச்சி மற்றும் ஜீவன் தொண்டமான் ஆகியோர் அமைச்சர்களாகியதைத் தொடர்ந்து மேலும் மூவர் அமைச்சர்களாகவுள்ளனர்.

எஸ்.பி. திஸாநாயக்க, ஜோன்சன் பெர்னாண்டோ மற்றும் ரோஹித அபேகுணவர்த்தன ஆகிய மூவருமே அமைச்சர்களாகப் பதவியேற்கவுள்ளனர்.

ஆரம்பத்தில் இவர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்கமுடியாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியாக நின்றார். இப்போது வழங்குவதென்ற முடிவுக்கு வந்துள்ளார் என்று அறியமுடிகின்றது.

பசில் ராஜபக்ச அமெரிக்கா செல்வதற்கு முன் அமைச்சுப் பதவிகளை வழங்குவதற்காக 12 பேர் அடங்கிய பெயர்ப்பட்டியலை ஜனாதிபதியிடம் கொடுத்துவிட்டுச் சென்றார். அவற்றுள் நாமல் ராஜபக்ச, மஹிந்தானந்த அளுத்கமகே, ஜோன்சன் பெர்னாண்டோ, ரோஹித அபேகுணவர்த்தன ஆகிய நால்வருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கமாட்டேன் என்று கூறி வந்தார். இப்போது அந்த முடிவில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. (ஒ-22)

வவுனியா மாநகரசபை

## த.வி.கூ. வேட்புமனு முழுமையாக ஏற்பு

வவுனியா, ஜன. 23

வவுனியா மாநகரசபையில் போட்டியிடுவதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணியால் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனு முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. கூட்டணியின் வேட்புமனுவில் இரு உறுப்பினர்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளிவந்தபோதும் அது தவறானது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-ஒ-110)

## மனமுடைந்து அரசியலிலிருந்து ஒதுங்கும் பெரமுன எம்.பி.க்கள்

கொழும்பு, ஜன. 23

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 20 பேர் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று முடிவெடுத்துள்ளனர். அவர்களுள் அதிகமானவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கும் தீர்மானித்துள்ளனர்.

அரசுக்கு எதிரான மக்கள் போராட்டத்தால் அதிருப்தியடைந்தே இவர்கள் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளனர் என்று அறியமுடிகின்றது.

இருந்தும், தற்போதைய நிலையில் தேர்தலில் போட்டியிட்டு வெல்லமுடியாது என்று இவர்கள் கருதுவதும் இவர்கள் அரசியலில் இருந்து ஒதுங்குவதற்கு மற்றுமொரு காரணம் என்றும் தெரிய வருகின்றது. (ஒ-22)

## நடமாடும் விற்பனை வாகனங்கள் சோதனை

தென்மராட்சிப் பிரதேசத்தில் நடமாடும் விற்பனை வாகனங்கள் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களால் திடீர் சோதனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றன.

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் வியாபாரத்தில் ஈடுபடும் ஐஸ்கிறீம் வாகனங்களில் சுகாதார விதிமுறைகளைக்கடைப்பிடிக்காமைகண்டறியப்பட்டதையடுத்து எச்சரித்து திரும்பிய னுப்பப்பட்டன.

நடமாடும் விற்பனை வாகனங்களில் பணிபுரிவோர் கட்டாயம் மருத்துவ சான்றிதழ் வைத்திருக்கவேண்டும். அந்தந்த உள்ளூராட்சிசபையில்பெற்ற இந்தவருடத்துக்கான உரிமம், வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் தலையில் மறைப்பு மற்றும் கையுறைகள் அணிந்திருத்தல், வாகனத்தினுள் அடிக்கடி கைகழுவக்கூடிய தண்ணீர் வசதி செய்திருத்தல், வாகனத்தினுள்தூசிவராதநிலையில்மறைப்பாக வைத்திருத்தல் வேண்டும் எனப்பொதுச்சுகாதாரப்பரிசோதகர்களால் அறிவுறுத்தப்பட்டது. (ச-9)

### மேயர்...

என, முன்னாள் மேயர் வி.மணிவண்ணன் குற்றம் சுமத்தியமை தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 19ஆம் திகதி யாழ். மாநகர முதல்வர் தெரிவு இடம்பெற்றிருந்தது. சபையில் கோரம் இருந்ததாக ஒரு பகுதியினரும் கோரம் இல்லை என பிறிதொரு பகுதியினரும் கருத்துத் தெரிவித்தமை தொடர்பில் ஊடகங்களில் அவதானித்தேன்.

மாநகரசபையில் புதிய முதல்வரைத் தேர்வு செய்யும் அதிகாரம் எனக்கு வழங்கப்படவில்லை. மாறாக உள்ளூராட்சி அமைச்சின் செயலரையும் உள்ளூராட்சி ஆணையாளரையும் நியமிக்கும் அதிகாரங்களுமே என்னிடம் உள்ளன. அரசமைப்பு மற்றும் மாநகர கட்டளைச் சட்டங்களுக்கு உட்பட்டு முதல்வர் தெரிவை மேற்கொள்ளும் அதிகாரம் உள்ளூராட்சி ஆணையாளருக்கே வழங்கப்பட்டுள்ளது. அதற்கு அமைவாகவே விடயங்கள் நடைபெற்றன - என்றார். (அ-ஒ-27)

### யாழ்ப்பாண...

நியமிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க அறிவித்துள்ளார்.

உதவிக் கல்விப் பணிப்பாளர் பஞ்சநாதன் சுதர்சன், சட்டத்தரணி பத்திநாதர் அன்ரன் புனிதநாயகம், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் யாழ். மாவட்டப் பணிப்பாளர் தில்லையம்பலவாணர் விமலன், சப்ரகமுவா பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் மஹிந்த எஸ் ரூபசிங்க, வாழ்நாள் பேராசிரியர் குமுது விஜேவர்த்தன, ஓய்வுபெற்ற வணக்கத்துக்குரிய பேராசிரியர் ஞா. பிலேந்திரன், சட்டத்தரணி டி.ரெங்கன், ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிவான் திருமதி சிறிநிதி நந்தசேகரன் மற்றும் ஏந்திரி ரி.சாந்தாதேவி ஆகியோரே உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழகவிதிமுறைகளுக்கமைய 15 வெளிவாரி உறுப்பினர்களைக் கொண்ட யாழ். பல்கலைக்கழகப் பேரவைக்கு 9 பேர் மட்டுமே இம்முறை நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (அ-ஒ-இ)

### கால்பந்து...

இலங்கை கால்பந்துத் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகள் மற்றும் ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டத்தில் இருந்து இலங்கை அதிகாரிகள் விலகியதாலும், இலங்கை கால்பந்து சம்மேளனம் தொடர்பான விடயங்களில் மூன்றாம் தரப்பினரின் தலையீடு காரணமாகவும் இந்த இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதன் விளைவாக, இந்தத் தடை நீக்கப்படும் வரை இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் அங்கத்தவர்கள் மற்றும் கிளப் அணிகள் இனி சர்வதேச போட்டிகளில் பங்கேற்க உரிமை இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

### ஐ.எம்.எப்...

சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கி (எக்ஸிம் வங்கி) நிதியமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் இந்த விடயத்தை தெரியப்படுத்தியுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கைக்கு வழங்கப்பட்ட பெரும்பாலான கடன்களுக்கு பொறுப்பான சீனாவின் எக்ஸிம் வங்கி, சீனாவுக்கு செலுத்த வேண்டிய கடன்களை இரண்டு ஆண்டுகளுக்கு இடைநிறுத்தம் செய்யும் என்று கூறியது.

சீனாவின் ஆதரவைப் பெறுவதற்கான இலங்கையின் முயற்சிகள் மற்றும் அதன் கடன்களை மறுசீரமைப்பதற்கான பல மாதங்களாக பேச்சு நடத்தப்பட்டது.

2.9 பில்லியன் ரூபா பெறுமதியான, இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதி வசதிக்கான சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்துக்கு ஆதரவளிப்பதாக எழுத்துபூர்வமாக உறுதியளிக்கும் வகையில் சர்வதேச நாணய நிதியத்துக்கு கடிதம் எழுதியுள்ளதாக இந்தியா அறிவித்த சில நாள்களில் சீனா இந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளது.

சீனா, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகியவை இலங்கையின் மிகப்பெரிய இருதரப்பு கடன் வழங்குநர்களாவர். சர்வதேச நாணய நிதியத்துக்கு இந்திய உத்தரவாதங்கள் வழங்கப்பட்ட உடனேயே, அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், இலங்கைக்கு ஆதரவளிக்க மற்றைய நாடுகளுக்கும் அழைப்பு விடுத்தார்.

இதேவேளை - சீனாவின் சர்வதேசத் திணைக்களத்தின் பிரதி அமைச்சர் சென் சோவ், கடந்த வாரத்தின் முற்பகுதியில் இலங்கை வந்திருந்தார். சீனா தனது கடன்களை மறுசீரமைப்பது குறித்து பரிசீலிக்கவேண்டும் என்ற இலங்கையின் கோரிக்கை குறித்து சில 'நல்ல செய்திகளை' அறிவிக்க இருப்பதாகவும் தெரிவித்தார்.

வெளிநாட்டுக் கடன்களுக்குப் பொறுப்பான அரசு நிறுவனமான சீன எக்ஸிம் (ஏற்றுமதிஇறக்குமதி) வங்கியின் கடிதம், நேற்று ஆரம்பமான சீன புத்தாண்டை முன்னிட்டு கொழும்பை வந்தடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

### பரீட்சை...

அதிக உற்பத்திச் செலவு மற்றும் நிதிப் பற்றாக்குறை காரணமாக தொடர்ந்தும் மின்வெட்டுகளை நடைமுறைப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகவும் இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது. இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவும் அதற்கு அனுமதி வழங்கியுள்ளது. (அ-ஒ-இ)

### மாணவர்...

மாணவர்கள் செல்லக்கூடிய அதிகபட்ச தூரம் 100 கிலோ மீற்றராக மட்டுப்படுத்தப்படவுள்ளதாக அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கல்விச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்படும் மாணவர்களை மாலை 6 மணிக்கு முன் அந்தந்தப் பாடசாலைக்கு அழைத்து வரவேண்டும். எதிர்காலத்தில் பாடசாலை மாணவர்கள் மேற்கொள்ளும் கல்விப் பயணங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட பகுதிகள் தொடர்பிலும் அதிக கவனம் செலுத்தப்படவுள்ளது.

புதிய அறிவுறுத்தல்கள் அடங்கிய சுற்றறிக்கையை அனைத்துப்பாடசாலைகள் மற்றும் கல்வி அதிகாரிகளுக்கு உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கல்வி அமைச்சின் மூத்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

நுவரெலியா நானுஓயா ரடெல்ல பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரி மாணவர்களை ஏற்றிச் சென்ற பேருந்து விபத்துக்குள்ளானதையடுத்தே புதிய சுற்றறிக்கையை வெளியிடுவது தொடர்பில் கல்வி அமைச்சால் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

### வாக்குச்சீட்டுக்கள்...

இந்தமுறை உள்ளூராட்சிசபைத் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக்குழுக்களை தேர்தல் ஆணைக்குழுவுக்கு அழைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக்குழுக்களின் பிரதிநிதிகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்படவுஉள்ளனர். (அ-ஒ-இ)

### போதை...

காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பிரிவினரின் சுற்றிவளைப்பிலேயே இந்தச் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் தெல்லிப்பழை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ஒ-27)

### மின்கட்டணத்தை...

விநியோகத்துக்கான நிலக்கரிக்கு 38.45 பில்லியன் ரூபா தேவை. மின் உற்பத்திக்குத்தேவையான நிலக்கரியை ஏப்ரல் 25 ஆம் திகதிக்கு முன்னதாகக் கொள்முதல் செய்யவேண்டும்' - என்றார். (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைகலப்பில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜன. 23

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோண்டாவிலில் இருவரிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் இருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக் கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. கோண்டாவில் வீதியில் முச்சக்கரவண்டியில் பயணித்த நபரிடம் மது போதையில் வீதியில் நின்றவர்கள் வாக்குவாதம் மேற்கொண்டுள்ளனர். இதையடுத்தே கைகலப்பு ஏற்பட்டுள்ளது. கைகலப்பில் காயமடைந்த இருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகிறது. (ச-125)


பட்டா - கன்டர் - லொறி
மாதாந்த வாடகைக்குத் தேவை.
075 936 0353

கார் விற்பனைக்கு
Wagon"R" Stingray
CBAxxxx தொடரிலக்கமுடைய 2018 ஆம் ஆண்டு உற்பத்தியும், இறக்குமதியும் செய்யப்பட்ட 51,000Km பாவித்த இரண்டாம் உரிமையாளரிடம் விற்பனைக்கு உண்டு.(Full Option)
தொடர்பு: 076 399 3008,077 630 6733

WEB DESINGING SOCIAL MEDIA
வேலை செய்ய
ஆண் / பெண் தேவை.
077 736 0353

## பெயர் உட்படுத்தல்

நவாலி தெற்கில் வசிக்கும் ஜெனிஸ் ஆகிய நான் எனது பெயர் ஜெனிஸ் என இத்தால் உறுதிப்படுத்துவதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் உதயரஞ்சன் ஜெனிஸ் என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிஷ குடியரசு மக்களுக்கு உறுதிப்படுத்துகின்றேன். (CS 48695) (3/6)

ஜெனிஸ்

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில் 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

### நிலப்பரப்பு

- A32 பிரதான வீதியில் இருந்து 600M தூரம்
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இருவழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும். சாவகச்சேரி நகரத் திற்கும் அரச. தனியார் பஸ் போக்குவரத்து சேவை உள்ளது.
இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்)
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)
ஒரு பரப்பின் விலை 675000 ரூபாய் மட்டுமே.
பார்வையிடும் நேரம்:- காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை.

தொடர்பு:- ஜெயம் 077 8147 389, 077 9865 457

## காணி விற்பனைக்கு

மீசாலை மேற்கு கார்த்திகேசு வீதியில் A- 9 வீதியில் இருந்து 300 மீற்றர் தொலைவில் 11 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (CS 23074) (3/6)

தொடர்புக்கு : 077 285 0965

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 06 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

### நிலப்பரப்பு

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன். 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- பெரிய நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A-9 பிரதான வீதியில் இருந்து 700 M தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 42 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன. (பைப் லைனிங்)
விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
- பார்வையிடும் நேரம் : காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

தொடர்பு:- ஜெயம் 077 9865 457, 077 8147 389

## வேலைவாய்ப்பு




யாழில் இயங்கிவரும் எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

1) எழுதுவினைஞர் (Clerk)
2) கணக்கு எழுதுவினைஞர் (Accounts Clerk)

ஆர்வமுள்ளவர்கள் இன்று (23.01.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00-02.00 மணிவரை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமுகம் தரவும்.

உதயன் பணிமனை
இல.361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்



தோற்றம் 05 - 01 - 1934
மறைவு 14 - 01 - 2023

பேராசிரியர்
### கோபாலப்பிள்ளை மகாதேவா

மட்டுவில் தெற்கு, யாழ்ப்பாணம், இலங்கையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட பேராசிரியர் கோபாலப்பிள்ளை மகாதேவா கடந்த 14.01.2023 லண்டனில் காலமானார்.

அன்னார் கந்தர் வேலாயுதர் கோபாலப்பிள்ளை மற்றும் இராமநாதர் அப்பா பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், சின்னையா முத்துக்குமாரசாமி மற்றும் தங்கரத்னம் முத்துக்குமாரசாமி (மானிப்பாய்) ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற Dr.சீதாதேவி மகாதேவா அவர்களின் அன்புக் கணவரும், செல்வி உமா மகாதேவா, திருமதி உஷா மோரன், Dr.லவன் மகாதேவா மற்றும் Dr.உலா மகாதேவா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற வி.கே. தில்லைநாயகம் மற்றும் காலஞ்சென்ற கே.விநாயகமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வி அமாலியா மகாதேவா பொன்ரன் மற்றும் செல்வி கமலா மகாதேவா பொன்ரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (05.02.2023) ஞாயிற்றுக்கிழமை லண்டன் நேரப்படி முற்பகல் 11.00 மணி தொடக்கம் மதியம் 12.45 மணிவரை West Chapel, Golders Green Crematorium, 62 Hoop Lane, London, NW11 7NL, UK அந்திய சேவையில் இடம்பெறும்.

நிகழ்நேர ஒளிபரப்புக்கான இணைப்பு
https://watch.obitus.com
username : gohi9569 password : 914859

தகவல்:
Dr.உலா மகாதேவா
(மகள்)

ஓம் சக்தி

## ஈரவிழிகளுடன் முதலாம் ஆண்டு

அருட்பெருஞ்ஜோதி
மண்மகிழ்
29.10.1936



தனிப்பெரும் கருணை
அகம் நெகிழ்
03.02.2022

### வல்லிபுரம் கதிர்காமநாதன்

(ஓய்வுபெற்ற கிராம சேவை உத்தியோகத்தர்)

ஆண்டொன்று சென்றதையா நீர் மறைந்து
ஆனாலும் எம் துயரம் மாறவில்லை எமைவிட்டு
பார் புகழ எமையெல்லாம் ஏற்றி வைத்தீர்
பாதியிலே எமைவிட்டு எங்கு சென்றீர் ?!
மீதி வழி தெரியாது தவிக்கின்றோம்
மீண்டுமொருகால் எமைவந்து பாரீரோ!
ஈரவிழிகளுடன் என்றென்றும் காத்திருப்போம்
ஈவிரக்கம் பார்த்து எமை காருமையா

வலாயுதம்பிள்ளை வீதி,
ுணாவில் மத்தி, சாவகச்சேரி. (cs 48346) (2)

குடும்பத்தினர்


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம் advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.01.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org